சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் - கல்வி- விடுதிகள் - பகுதி II திட்டம் - 2006-2007 ஆம் ஆண்டு - ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் கல்லூரி மற்றும் முதுகலை பட்டதாரி விடுதி மாணவர்களுக்கு 2706 செட் அறைகலன்கள் வழங்குதல் - ஆணைகள்- வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 4 )துறை

அரசு ஆணை (நிலை) எண்: 118
நாள் .15.9.2006

படிக்கப்பட்டது :-

1. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் குறிப்பு நாள்.16.6.06
2. அரசு கடித எண்.13532/ஆதிந4/06-1, நாள் 29.6.06.
3. ஆதிதிராவிடர் நல இயக்குநர் கடித எண் த1/20262/06, நாள். 21.6.2006 , மற்றும்
நாள் 29.6.2006 மற்றும் 5.9.06.

---

ஆணை :

ஆதிதிராவிடர் நல இயக்குநர் தமிழகத்திலுள்ள 1178 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் 107 கல்லூரி விடுதிகளும் 9 முதுகலைப் பட்டதாரி விடுதிகளும் அடங்கும் என்றும் இதுவரை 6663 செட் அறைகலன்கள் கல்லூரி விடுதி மாணவர்களுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து இன்னும் 2706 செட் அறைகலன்கள் மீதமுள்ள கல்லூரி மற்றும் முதுகலை பட்டதாரி விடுதி மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டியுள்ளது என்றும் விடுதி மாணவர்கள் சௌகரியமாக தங்குவதற்கும் தங்கள் படிப்பில் போதிய கவனம் செலுத்துவதற்கும் மேற்கூறிய அறைகலன்கள் வாங்கி வழங்குவது அவசியமாகிறது என்றும் ஒரு செட் அறைகலன் ரூ.3500/- (ரூபாய் மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) எனக் கணக்கிடுகையில் 2706 செட் அறைகலன்களின் மதிப்பு ரூ.94,71,000/- (ரூபாய் தொண்ணூற்று நான்கு இலட்சத்து எழுபத்தோராயிரம் மட்டும்) ஆகிறது என்றும் இந்த செயற்குறிப்பினை 2006-2007 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் கொணர்ந்து விடுதி மாணவர்களுக்கு வாங்கி வழங்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

2. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு

நன்கு பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் ஆதிதிராவிடர் நல கல்லூரி மற்றும் முதுகலை பட்டதாரி விடுதி மாணவர்களுக்கு ஒரு செட் அறைகலன் விலை ரூ.3500/-(ரூபாய் மூன்றாயிரத்து ஐநூறு மட்டும்) வீதம் 2706 செட் அறைகலன்கள் ரூ.94,71,000/-ல் (ரூபாய் தொண்ணூற்று நான்கு இலட்சத்து எழுபத்து ஒன்று ஆயிரம் மட்டும்) வாங்கி வழங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. ஒரு செட் அறைகலன் என்பது ஒரு கட்டில், ஒரு நாற்காலி மற்றும் ஒரு மேசை ஆகியன கொண்டதாகும்.

3. அறைகலன்கள் வாங்குவது சம்பந்தமாக தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-னை பின்பற்றி வாங்கி வழங்கும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

அறைகலன்கள் வழங்குதல்:-

ரூ.3556000/-

1) 2225 Welfare of SCs/STs and OBCs - 01 welfare of SCs-277 Edn-1 Non-Plan AE. Hostels-05-office Expenses -05-Furniture (D.P.Code No.2225-01-277-AE-0556)

ரூ.4672500/-

2) 2225 Welfare of SCs/STs and OBCs - 01 welfare of SCs-277 Edn-Schemes in the Tenth-Five Year Plan-II State Plan-K.D. Hostels-05-office Expenses -01-Furniture

(D.P.Code .2225-01-277-KD-0556)

ரூ.1242500/-

3) 2225 Welfare of SCs/STs and OBCs - 01 welfare of SCs-277 Edn-Schemes in the Tenth-Five Year Plan-II State Plan-K.E. Hostels-05-office Expenses -05-Furniture

(D.P.Code .2225-01-277-KE-0556)

5. மேலே பத்தி 2-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை கீழ்கண்ட கணக்கு தலைப்பில் 2006-2007-ல் திருத்திய வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிஒதுக்கத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின் மூலம் செலவினம் மேற்கொள்ள இயக்குநர் ஆதிதிராவிடர் நலன் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார். 2006-2007 திருத்த மதிப்பீட்டில் இந்த மறு நிதியொதுக்கத்தை சேர்க்குமாறு இயக்குநர் ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

" **2225** Welfare of Scheduled castes, Scheduled Tribes and other Backward Classes 01 Welfare of Scheduled Castes - 277 Education - Schemes in the Tenth Five Year Plan II State Plan - KD Hostels24 materials & Supplies
( DPC 2225 01 277 KD 2403)

6. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண் 129/DS MT/06. நாள்/14/9/2006-ல் ஒப்புதல்பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.550.

(ஆளுநரின் ஆணைப்படி)

பு.ஏ. இராமையா,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை-5
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35/6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 5/35/1
அனைத்து மாவட்ட ஆட்சியர்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல் :-

நிதித்(சந/வ.செ.பொII)துறை, சென்னை 9
அமைச்சர்(ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை 9
ஆதி (ம) பந (அநமு 1/ஆதிந4/ஆதிந7/ஆதிந8(1)ஆதிந9/) துறை சென்னை 9 .
உதிரி / இருப்புக் கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.